## *DEPOSITION OF WITNESS*

***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.554/2020 – P.W. 2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | முருகானந்தம் |
| *Father/Husband's Name* | கணேசன் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *48* |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 03.02.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அசா.1 மற்றும் எதிரியை தெரியும்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு மன்னார்குடி மூன்றாம் தெரு இறக்கத்தில் மன்னார்குடி நால்ரோடு பிரியும் இடத்தில் நான் காலை நேரத்தில் மணி 07.30 இருக்கும் நான் டீச்சாப்பிடலாம் என்று நடந்து வந்துகொண்டிருந்தேன். அப்போது மணி என்பவர் சோடாபாட்டிலை உடைத்து முத்துவை இடது காலில் குத்தினார். அதனால் முத்து மயக்கம் அடைந்து கீழே விழுந்து விட்டார். அருகில் இருந்த சேகர் தடுத்துக்கொண்டிருந்தார். சம்பவ இடத்தில் மூன்று பேர் தான் இருந்துகொண்டிருந்தோம். செல்போன் பிரச்சனையால் தான் இந்த பிரச்சனை நடந்தது. முத்து மயக்கநிலையிலே இருந்ததால் நானும், சேகர் என்பவரும் முத்துவை மன்னார்குடி GH க்கு அழைத்து சென்று Admit செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்னவைகளை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவத்தின் போது சம்பவ

இடத்தில் சுமார் 10, 15 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் இல்லை. சேகர் என்பவர் எனது அண்ணன் முத்துவின் நண்பர். அசா.1 முத்து என் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். புதுத்தெரு என்பது வேறு இடம், மூன்றாம் தெரு முக்கம் என்பது வேறு இடம் இந்த இரண்டு இடங்களுக்கும் 300 மீ அப்பால் உள்ள இடம் என்றால் சரிதான்.

போலீசார் விசாரணையில் புதுத்தெரு மகேந்திரா ஷோரும் அருகில் சண்டை நடந்ததாக சொன்னேனா என்றால் இல்லை. சண்டை சுமார் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் சுமார் 10 நிமிடம் நடந்திருக்கும். சம்பவ இடத்தில் மன்னார்குடி GH க்கு நடந்து சென்றாலே 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். பாட்டிலை உடைத்து சுமார் 2,3 குத்துகள் எதிரி குத்தியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் எனது தம்பி அசா.1 க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் சொன்னது போல் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.